1972 மார்ச் 11]

செய்யப்பட்டு வருகிறது. பாக்கி விவரங்களுக்கு தொழிலாளர் நல அமைச்சருக்குக் கேள்வி போட்டால் பதில் சொல்லுவார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி எண்கள் 439, 440 ஆகியவை தொழில்துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகின்றன.

Bridges

* 441 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there are proposals under the consideration of the Government to construct a bridge at Gnanamala Kadavu across Kuzhithurai river in Kanyakumari district?

மாண்புமிகு திரு. எஸ் ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. என். டென்னிஸ் : இந்தப் பாலத்தை அமைப்பதன் மூலம் மார்த்தாண்டம் பகுதியிலுள்ள முக்கிய ஊர்களைத் தொடர்பு படுத்தும் என்ற வகையில் அந்த ஊர் மக்கள் நீண்ட காலமாக வற்புறுத்தி வரும் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ள முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தப் பாலம் கட்ட 20 லட்சம் ரூபாய்க்கு மேல் செலவாகலாம் என்று கருதப்படுகிறது. அதற்கு தற்போது நிதிநிலை வசதி இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ரா. ரா. முனுசாமி . . இது கன்னியாகுமரியைப் பற்றிய கேள்வி.

திரு. ரா. ரா. முனுசாமி : கன்னியாகுமரியில் இருப்பது போன்று தமிழ் நாட்டில் இருக்கின்ற முக்கியமான ஊராட்சி மன்றங்களில் நிதி வசதியைக் கணக்கிட்டுப் பார்க்கிறபோது பெரிய பெரிய நீர் ஓடைகள் இருக்கின்ற நிலையில் ஊருக்கு ஊர் தொடர்பு ஏற்படுத்த நிதிவசதி இல்லாத நிலையில் 40,000, 50,000 ரூபாய்க்கு மேற்பட்ட பாலம் கட்டும் திட்டங்களை அரசு எடுத்து நிறைவேற்றித் தர முன்வருமா?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பஞ்சாயத்து யூனியன்களுக்குப் பரிந்து பேசியதற்காக நன்றி.